# எடுக்கப்படுவதற்கேற்ற கிருபை & எடுக்கப்படுவதற்கேற்ற விசுவாசம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# அவர் அங்கிருந்து ஒரு சரீரத்தில் தம்முடைய மணவாட்டியாகிய சபையை பெற்றுக் கொள்ள வருவார்!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-24E மூவகை விசுவாசிகள்

97. அதன் காரணமாகவே, ஜீவபுஸ்தகத்தில் முன்குறிக்கப்பட்ட மணவாட்டியானவள் அழைக்கப்படும்போது, வானத்திலிருந்து ஓர் சத்தம் பிறந்து, அது மணவாட்டிக்குள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அபரிமிதமாக நிரப்பி, பூமியிலிருந்து அவள் எடுக்கப்படுவதற்கேற்ற கிருபையையுண்டாக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

விஞ்ஞானமும், விண்வெளி வீரர்களும் அநேக கோடி மைல்கள் தூரம் விண்வெளியில் சென்று ஆராய்ந்து

பரலோகம் என்ற ஒன்று இல்லையென்று கூறி உறுதிப் பத்திரமாக வெளியிட்டாலும், அதை குறித்து எனக்கு எந்தவித கவலை யுமில்லை. பரலோகம் என்று ஒன்றுண்டு. அங்கே உண்மைத்துவமாக இயேசு கிறிஸ்து என்பவரும் உண்டு.

அவர் அங்கிருந்து ஒரு சரீரத்தில் தம்முடைய மணவாட்டியாகிய சபையை பெற்றுக் கொள்ள வருவார்!

எவ்வளவு பழையக் கதையாக அது தோன்றினாலும் அது ஒரு காரியமல்ல, ஏனெனில் அதை தேவன் கூறினதினால் அது சத்தியமாயிருக்கிறது. அதைதான் விசுவாசிகள் விசுவாசிக்கின்றனர்.

இப்பொழுது தெய்வீக சுகமளிப்புக்கும்கூட போதிய விசுவாசம் நமக்கில்லை. ஒரு இமைப்பொழுதில் நம் சரீரம் மாறி நாம் இப்பூமியிலிருந்து எடுக்கப்படுவதற்கு, நமக்குப் போதிய விசுவாசம் இருக்க வேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-03-18 முதலாம் முத்திரை

74. பெந்தெகொஸ்தே சபையின் கால முடிவில் நாம் ஒரு செய்தியைப் பெறப் போகிறோம் என்பதாக தேவனுடைய வார்த்தையின்படி இன்றிரவு தேவ ஒத்தாசையைக் கொண்டு உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.

கடைசிக்கால செய்தியாளன் அதுவரை தளர்ந்து விடப்பட்டுக் காணப்பட்ட பாகங்களையெல்லாம் நேராக்கி, சபை எடுக்கப்படுவதற்கென, தேவனைக் குறித்த முழு இரகசியத்தையும் வெளிப்படுத்துவான்.

75. பின்னர் வேதத்தில் எழுதப்படாத ஏழு இரகசியமான இடிமுழக்கங்கள். அது

சரி. ஆகவே எடுத்துக்கொள்ளப்படுவதற்கான விசுவாசத்திற்காக மணவாட்டியை ஒன்று சேர்ப்பதற்கென்று, இந்த கடைசி நாட்களில் அந்த ஏழு இடிமுழக்கங்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.

ஏனெனில் இப்பொழுது நம்மிடம் உள்ளதைக் கொண்டு, நாம் எடுக்கப்படுதலில் செல்லமுடியாது. அங்கே ஏதோ ஒன்றுள்ளது. நாம் இன்னும் தூரம் செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இப்பொழுது தெய்வீக சுகமளிப்புக்கும்கூட போதிய விசுவாசம் நமக்கில்லை. ஒரு இமைப்பொழுதில் நம் சரீரம் மாறி நாம் இப்பூமியிலிருந்து எடுக்கப்படுவதற்கு, நமக்குப் போதிய விசுவாசம் இருக்க வேண்டும்.

~ 4 ~

சற்று பின்பு, கர்த்தருக்குச் சித்தமானால், அது எங்கு எழுதப்பட்டுள்ளது என்பதை நாம் பார்க்கலாம்.



விரைவில் கர்த்தராகிய இயேசுவின் வருகை இருக்கும், ஒரு நொடியில், ஒரு இமைப்பொழுதில் சபை மறுரூபமாக்கப்படுவதற்கு நமக்கு எடுத்துக்கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசம் இருக்கவேண்டும்.

இல்லையென்றால் நாம் எடுத்துக்கொள்ளப்படுதலில் செல்லவே முடியாது.

கவலைப்படாதிருங்கள், அது இருக்கும், அது இருக்கும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-19 பரிசுத்த ஆவியின் பேரில் COD #11

20. அன்றொரு நாள் ஹாட்டி ரைட் ஒன்றையும் கேட்கவில்லை. அவள் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் சரியான வார்த்தை கூறினாள், அது பரிசுத்த ஆவியைப் பிரீதிப்படுத்தினது. எனவே பரிசுத்த ஆவி அவளிடம் பேசினார். "ஹாட்டி, நீ எது வேண்டுமானாலும் கேள். அது உண்மையில் நடக்கிறதா இல்லையா வென்று பார். எது வேண்டுமானாலும் கேள் (அங்கு உட்கார்ந்திருந்த ஊனமுள்ள அவளுடைய சகோதரியின் சுகத்துக்காக; மலையின் மேல் அவள் கஷ்டப்படுவதைத் தவிர்க்க பத்தாயிரம் டாலர்கள்; குன்றிப் போயிருந்த அவளுடைய உடலில்

வாலிபம் திரும்ப வருதல்); நீ எதை வேண்டுமானாலும் இப்போதே கேள், அது உனக்கு உடனடியாக கொடுக்கப்பட வில்லையென்றால், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி". அது அற்புதமான ஒன்று, இல்லையா?

21. இயேசு, "இந்த மலையைப் பார்த்து..." என்றார். இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அது நாம் பிரவேசித்துக் கொண்டிருக்கும் ஊழியம். நாம் அந்த பாதையில் சென்று கொண் டிருக்கிறோம்.

**விரைவில் கர்த்தராகிய இயேசுவின் வருகை இருக்கும், ஒரு நொடியில், ஒரு இமைப்பொழுதில் சபை மறுரூபமாக்கப்படு வதற்கு நமக்கு எடுத்துக்கொள்ளப்படு தலுக்கேற்ற விசுவாசம் இருக்கவேண்டும்.**

**இல்லையென்றால் நாம் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லவே முடியாது.**

**கவலைப்படாதிருங்கள், அது இருக்கும், அது இருக்கும்.**

இந்த கடைசி சபையின் வல்லமை தன் சகோதரர்களை உயிரோடு கொண்டு வரும், அந்த சபையின் வல்லமை தன் சகோதரர்களை உயிரோடு கொண்டு வரும்.

அந்த சபையின் வல்லமை அதன் சகோதரர்களை உயிரோடு கொண்டு வரும். இப்படியாக பொதுவான உயிர்த்தெழுதல் உண்டாயிருக்கும். அதை நாம் எதிர்நோக்கியிருக்கிறோம்.

ஒளி வானத்திலிருந்து பிரகாசித்து, எக்காளம்
தொனிக்கும் போது, கிறிஸ்துவின் சரீரம்
விரைவில் ஒன்று சேர்க்கப்பட்டு,
நொடிப்பொழுதில் மறுரூபமடைந்து,
ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும். ஆம்
அத்தகைய ஒரு சம்பவம் நிகழவேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 63-07-14M முறையிடுகிறது என்ன? சொல்!

49. அவருடைய வருகையைக் குறித்தும் எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்தும் சற்று முன்பு ஒரு மனிதன் என்னிடம் கேட்டது போல, நாம் அதை இப்பொழுது அறிந்துள்ளதைப் போல நாம் அறிவோம். நாமும் நமது காலத்தை இவ்வுலகில் கழித்து விட்டோம்.

'எடுத்துக்கொள்ளப்படுதல்' நிகழும் சமயம் அருகாமையிலுள்ளது.

சபையை ஒன்று சேர்த்து, நாம் வாழ் கின்ற இந்த சரீரங்களை மறுரூபப்படுத்தும் இயற்கைக்கு மேம்பட்டதை, பெலனை

அளிக்கின்றதுமான எடுத்துக்கொள்ளப் படுதலின் விசுவாசத்திற்காகவும் நாம் காத்துக் கொண்டிக்கிறோம்.

மரித்துப்போனவர்களை தேவன் இப் பொழுது நம் கண்களுக்கு முன்பாக உயிரொடெழுப்பி அவர்களை நம்முன் கொணர்ந்து நிறுத்துவதையும், ஒரு மனிதன் நிழலைப் போன்று மாறும் அளவிற்கு அரித்தெடுக்கும் புற்றுநோயை சுகமாக்கி அவனை மறுபடியுமாக திட காத்திரமான, ஆரோக்கியமான மனிதனாக தேவன் மாற்றுவதை நாம் காணும்போது, அது ஜனங்களுக்கு எடுத்துக்கொள்ளப் படுதலுக்கேற்ற விசுவாசத்தை நமக்களித் தாக வேண்டும்.

ஒளி வானத்திலிருந்து பிரகாசித்து, எக்காளம் தொனிக்கும் போது, கிறிஸ்து

வின் சரீரம் விரைவில் ஒன்று சேர்க்கப் பட்டு, நொடிப்பொழுதில் மறுரூப மடைந்து, ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் படும். ஆம் அத்தகைய ஒரு சம்பவம் நிகழவேண்டும்.

வேத கல்லூரிகள் இதனைக் குறித்த அறிவைப் பெற்றிருக்கலாம். ஆனால் அவைகளால் அதனை உற்பத்தி செய்ய முடியாது. அவர்கள் அறிவுபூர்வமாக சரி யாகவே இருக்கின்றனர். ஆனால் நீங்கள் அந்த ஒளியைச் சந்திக்க வேண்டும்! அந்த ஒன்றை நீங்கள் கண்டடைந்தாக வேண் டும்.

விசுவாசம், எந்தக் காலத்திலும் இருந்திராத அளவு, அதிகமான விசுவாசம் தேவையாக இருக்கிறது. ஏனெனில் அது எடுத்துக் கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசமாக இருக்கிறது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-07-18E ஏற்ற காலத்தின் ஆவிக்குரிய ஆகாரம்

---

4. நீங்கள் தேவனுடைய பரிசுத்தமான வார்த்தையிலே விசுவாசமுள்ளவர்களாய், இந்த மணி நேரத்திற்குரிய விசுவாசத்திலே கூட்டிக் கட்டப்பட்டு வளர வேண்டு மென்று நான் விரும்புகிறேன். **விசுவாசம், எந்தக் காலத்திலும் இருந்திராத அளவு, அதிகமான விசுவாசம் தேவையாக இருக் கிறது. ஏனெனில் அது எடுத்துக்கொள்ளப் படுதலுக்குரிய விசுவாசமாக இருக்கிறது.** ஆகவே நீங்கள் பார்த்த எல்லாவற்றிலும், கேட்ட எல்லாவற்றிலும், உங்கள் காதுகள் கேட்க பிரசங்கிக்கப்பட்ட வார்த்தையிலும், நீங்கள் காணத்தக்கதாக நிறைவேறின அடையாளங்கள், அற்புதங்கள் எல்லாவற் றிலும் உங்களுக்கு விசுவாசம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

உங்களுடைய ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் அங்கே தங்கள் விளக்குகளில் எண்ணெய் உடையவர்களாய் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசம், அற்புதங்கள், அடையாளங்கள், தீர்க்கதரிசனங்கள், மற்ற எல்லாவற்றையும் விசுவாசிப்பார்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 53-07-29, ஆதியாகமத்தின் மீதான கேள்விகளும் பதில்களும் COD #1

260. **உங்களுடைய ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் அங்கே தங்கள் விளக்குகளில் எண்ணெய் உடையவர்களாய் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசம், அற்புதங்கள், அடையாளங்கள், தீர்க்கதரிசனங்கள், மற்ற எல்லாவற்றையும் விசுவாசிப்பார்கள்.** மீதமுள்ளவர்களிலிருந்து இந்த ஐந்து பேர்கள் வெட்டி எடுத்து கொள்ளப்பட்டனர்.

261. மற்ற ஐந்து பேரும் இன்னும் கன்னிகைகளாய் இருக்கின்றார், அவர்கள் இழந்து போகப்படமாட்டார்கள், ஆனால் உபத்திரவ காலத்திற்குள் செல்வர்.

என் அபிப்பிராயப்படி இதுதான் அந்த காரியமாக இருக்கும்... கர்த்தர் என்னிடம் இதை கூறுகிறார் என்று நான் சொல்லவில்லை. இது தான் செல்ல வேண்டியதற்காக எடுக்கப்படுதலுக்கேற்ற விசுவாசத்தை துவக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-12-29E பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள்

11. சில சிறு வினோதமான காரியங்கள் நடப்பதை நீங்கள் ஒருக்கால் காணலாம்.-- பாவமான எதுவும் அல்ல அந்த அர்த் தத்தில் நான் கூறவில்லை - வழக்கமான போக்குக்கு வினோதமான ஒன்று என்னும் அர்த்தத்தில் கூறுகிறேன். ஏனெனில் இந்த ஊழித்தில் நான் அடைந்துள்ள நிலையில், நான் பின்ன டைந்து, அந்த இடத்தை கவனித்து, அதை உபயோகிப்பதற்கான நேரத்துக்காக காத்துக் கொண்ருக்கிறேன். ஆனால் அது உபயோகிக்கப்படும்! அது எல்லோருக்கும் தெரியும். முதலாவது எவ்வளவு நிக்சமாக அடையாளம் கொள்

ளப்பட்டதோ, அதே விதமாக இரண்டாவதும் அடையாளம் கண்டு கொள்ளப் பட்டது. ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் ஆழ்ந்து சிந்தித்தால், (வேதம் கூறுவது போன் இதிலே ஞானம் விளங்கும் -- வெளி. 13:8) மூன்றாவதும் கூட சரிவர அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு விட் டது. அது எங்குள்ள தென்று நாமறிவோம். எனவே மூன்றாம் இழுப்பு இங்குள்ளது.

12. **அது மிகவும் புனிதமானதால், அவர் துவக்கத்தில் என்னிடம் கூறினது போன்று, அதைக் குறித்து நான் அதிகம் கூற கூறக்கூடாது. அவர், "இது, இதை குறித்து ஒன்றும் கூறாதே" என்று என்னிடம் கூறினார். உங்களுக்கு அது ஞாபகமுள்ளதா, அநேக ஆண்டுகளுக்கு**

முன்பு? [சபையார், "ஆமென்" என்று கூறுகிறார்கள் - ஆசிரியர்.] அது தனக் காகவே பேசிக் கொள்கிறது. பாருங்கள்? ஆனால் நீங்கள்... நான் மற்றவைகளை விளக்கிக் கூற முயன்றேன், நான் தவறு செய்து விட்டேன். என் அபிப்பிராயப்படி இதுதான் அந்த காரியமாக இருக்கும்... கர்த்தர் என்னிடம் இதை கூறுகிறார் என்று நான் சொல்லவில்லை. இது தான் செல்ல வேண்டியதற்காக எடுக்கப்படு தலுக்கேற்ற விசுவாசத்தை துவக்கும். நான் சிறிது காலம் அமைதியாயிருக்க வேண்டும்.

அது வெளிப்படும்போது அந்தச் சபையானது அசைந்து செல்லும்படியாக, அந்த எடுக்கப்படும் கிருபைக்கான விசுவாசத்தை அது அளிக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-03-18 முதலாம் முத்திரை

ஆனால் யோவான் இதை எழுதினான் என்பதை இப்பொழுது சிந்தியுங்கள்.

167. **ஆனால் அவன் மற்ற ஏழு இடிகளைப் பற்றி எழுத ஆரம்பித்த பொழுது, அவர், ”அதை எழுதாதே” என்றார். அவன் கண்டவை யாவும் எழுதவேண்டுமென்ற கட்டளை அவனுக்கு உண்டாயிருந்தது. ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 10-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள ஏழு இடிமுழக் கங்கள் சொன்னவைகளை "எழுதவேண் டாம்” என்று அவர் கூறினார். அவை யாவும் பரமரகசியம். அவையென்னவென்பதை நாம் இதுவரை அறியோம். ஆனால் சரியாக**

**இப்பொழுதே அது வெளிப்படும் என்பது என்னுடைய கருத்து. அது வெளிப்படும்போது அந்தச் சபையானது அசைந்து செல்லும் படியாக, அந்த எடுக்கப்படும் கிருபைக்கான விசுவாசத்தை அது அளிக்கும். பாருங்கள்?**

168. நாம் இதுவரை அறிந்த எல்லா வற்றையும் ஆராய்ந்திருக்கிறோம். ஒவ் வொரு சபையின் காலங்களிலும் நிகழ்ந் தவைகளை நாம் கவனித்துக் கொண்டு வந்துள்ளோம். தேவனுடைய ரகசியங் களை நாம் கண்டிருக்கிறோம். கடைசி நாட்களில் மணவாட்டியின் மகத்தான ஒன்று கூடுவதின் தோன்றுதலை குறித்து நாம் அறிந்திருக்கிறோம். ஆயினும் நம்மை தெளிவுபடுத்திக்கொள்ள அவசிய மான ஏதோ ஒன்று இன்னமும் வெளிப் படாமல் உள்ளது.

169. அந்த இரகசியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக யோவான் காலத்தில் வெளிப் பட்டபோது தேவன் அவனிடம், "யோவானே, அதை மறைத்துவை. சற்று பொறுத்துக்கொள். நான் அந்த நாளிலே அதை வெளிப்படுத்துவேன். அதை எழுத வேண்டாம். ஏனெனில் அதை படிப்பவர் கள் தடுமாறி விழுவார்கள். அவர்கள் அதைப் புரிந்து கொள்ளும் தன்மையைப் பெற்றிருக்கும் நாளில் நான் அவர்களுக்கு அதை வெளிப்படுத்துவேன்'' என்று சொல்லியிருப்பார் என நினைக்கிறேன்.

Bro. Branham:

~~~~~~~~

இருப்பதிலேயே மகத்தான நாள் ஒன்று இருக்கும் என்று நாம் சிந்திப்போமானால், அது நாம் வீட்டுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய எடுத்துக் கொள்ளப்படும் நாள் (Rapture) ஆகும். அது ஒரு அருமையான நாளாக இருக்காதா?

~~~~~~~~

செய்தி: எதிர்பார்ப்புகள், 54-0228A

19. இப்பொழுது, எனவே மூன்று கர்த்தருடைய வருகை இருக்கிறது. முதலாவதாக கர்த்தராகிய இயேசு தன்னுடைய மணவாட்டியை மீட்டுக் கொள்வதற்காக வந்தார். இரண்டாவதாக தன்னுடைய மணவாட்டியை எடுத்துக் கொள்ள வருகிறார். மூன்றாவதாக தன்னுடைய மணவாட்டியோடு வருகிறார்.

*செய்தி: நியாயத்தீர்ப்பினால் மீட்பு,* 54-1114

சுவிசேஷத்தின் ஒரு ஊழியன் என்னும் முறையில், இன்னும் மணவாட்டியின் எடுத்துக் கொள்ளப்படுதலைத் தவிர வேறு எதுவும் விடப்பட்டுள்ளது என்பதை என்னால் காண முடியவில்லை.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல்



# எடுக்கப்படுவதற்கேற்ற கிருபை & எடுக்கப்படுவதற்கேற்ற விசுவாசம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து